பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 தை 09 புதன்கிழமை 22.01.2025 கதிர் 075

## இனி இது ரகசியம் அல்ல!

யாழ்ப்பாண கலாசார மண்டபத்தின் பெயர் திடீரென திருவள்ளுவர் கலாசார நிலையமாக மாற்றப்பட்டதற்குத் தமிழ் மக்கள் மத்தியில் கடும் எதிர்ப்பு ☞ 2

### விமான நிலையத்தில்
## சிறிதரன் தடுக்கப்பட்டது குறித்து விசாரணை நடத்த அறிவுறுத்து
### சபையில் தெரிவித்தார் அமைச்சர் பிமல்



நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் விமான நிலையத்தில் எதிர்கொண்ட அசௌகரியத்துக்கு வருத்தமடைகிறோம். இந்தச் சம்பவத்துக்கும் ஆளும்தரப்புக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது. நாம் இதில் தலையீடு செய்யவில்லை. விசாரணைகளை மேற்கொள்ளுமாறு உரிய தரப்பினருக்கு அறிவுறுத்தியுள்ளோம் எனச் சபை முதல்வரும், சிவில் விமான சேவைகள் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமர்வின் போது பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் சிறப்புரிமை மீறல் ☞ 2

## சிறீதரன் தடுக்கப்பட்டமை குறித்து முறையான விசாரணை தேவை
### ஹக்கீம் நாடாளுமன்றத்தில் வலியுறுத்து

நாடாளுமன்ற உறுப்பினர் எஸ் சிறிதரனுக்கு பயணத்தடை விதிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்ட விமான நிலைய அதிகாரிகள் அதற்கான நீதிமன்ற வழக்கினைக் குறிப்பிடவில்லை. சிறிதரனின் சிறப்புரிமை மீறப்பட்டு, அவருக்குப் பெரும் அநீதி இழைக்கப்பட்டுள்ளது. முறையான விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப் ஹக்கீம் சபையில் வலியுறுத்தினார்.



நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமர்வின் போது விமான நிலையத்தின் தான் தடுத்து வைக்கப்பட்டமை தொடர்பில் ☞ 2

## ஆளும்தரப்பினர் 6 மாதங்களில் பாதுகாப்புத் தேடவேண்டிவரும்

மகிந்தராஜபக்சவின் பாதுகாப்பிலிருந்து படையினரை நீக்கினால் அவரின் பாதுகாப்புக்காக தெற்கில் இருந்து மக்கள் வருவார்கள். அவருக்கு ஒன்றுக்குப் 10 வீடுகளை மக்கள் வழங்குவார்கள். எங்களுக்குப் பாதுகாப்பு தரப்பினர் ☞ 2

## சிலாபம் மணல் அகழ்வின் பின்னால் அரசியல்வாதிகள்
### பெருந்தோட்ட அமைச்சர் குற்றச்சாட்டு

சிலாபம் பெருந்தோட்டக் கம்பனிக்கு சொந்தமான காணிகளில் இடம்பெறும் மணல்அகழ்வு மோசடிகளின் பின்னணியில் இரண்டு முக்கிய அரசியல்வாதிகள் இருப்பதாக பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சர் சமந்த வித்யாரத்ன தெரிவித்தார். ☞ 2

## ஆளும்தரப்புடன் நாமல் நேற்று சபையில் தர்க்கம்

’தூய சிறிலங்கா’ திட்டம் தொடர்பாக எதிர்க்கட்சி உறுப்பினர் நாமல் ராஜபக்ச நேற்று நாடாளுமன்றத்தில் ஆளும்தரப்பினருடன் தர்க்கத்தில் ஈடுபட்டார். இதனால் சபையில் ஆளும்கட்சி உறுப்பினர்களுக்கும் நாமல்ராஜபக்சவுக்கும் இடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

நாடாளுமன்றத்தில் ☞ 8

# துப்பாக்கிச் சூடுகளுடன் தொடர்பு; சந்தேகத்தில் 8 படையினர் கைது
### அவர்களில் ஒருவர் ராணுவ மேஜர்

துப்பாக்கிச் சூடுகள் மற்றும் குற்றங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் இராணுவ மேஜர் உட்பட 6 படையினரும் ஒரு பொலிஸ் அதிகாரியும் சிவில் பாதுகாப்பு அதிகாரி ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

அவர் நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ’தூய ஸ்ரீ லங்கா’ செயற்திட்டம் மீதான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சமீபத்திய காலங்களில் இடம்பெற்ற குற்றங்கள் மற்றும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் ஒரு ☞ 2

### அரச பங்களாக்களை ஆக்கிரமித்திருந்த
## செந்தில், வடிவேல் சுரேஸ் ஆகியோரை ஒரு வாரத்திற்குள் வெளியேற்றினோம்
### அமைச்சர் பெருமிதம்

பெருந்தோட்டத்துறை அபிவிருத்தி அமைச்சுக்கு சொந்தமான தோட்டங்களுக்குரிய பங்களாக்களில் பல ஆண்டுகாலமாக பலவந்தமான முறையில் வசித்த செந்தில் தொண்டமான் மற்றும் வடிவேல் சுரேஷ் ஆகியோரை ஒருவார காலத்துக்குள் வெளியேற்றியுள்ளோம். சட்டவிரோத செயற்பாடுகளுக்கு ஒருபோதும் துணைபோக போவதில்லை. கடுமையான நடவடிக்கைகளை எடுத்துள்ளதால் ஊழல்வாதிகள் தற்போது திணறுகிறார்கள் என பெருந்தோட்டத்துறை அபிவிருத்தி மற்றும் தோட்ட ☞ 2



## இன, மத, மொழி வாதங்கள் செல்லுபடியற்றவையாகின
### நாடாளுமன்றத்தில் சிநேசன் உரை

இனவாதம், மதவாதம், மொழிவாதம் மற்றும் பிரதேசவாதம் ஆகியவற்றால் நாடு அசுத்தமாக்கப்பட்டுள்ளது. இவை கடந்த காலங்களில் தேர்தல் பரப்புரையாகக் காணப்பட்டது. ஆனால் கடந்த தேர்தல் பரப்புரையில் இந்த அடிப்படைவாதங்கள் செல்லுபடியற்றதாகியுள்ளது. இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஶ்ரீநேசன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற ’தூ-ய ஶ்ரீ லங்கா’ செயற்திட்டம் தொடர்பான சபைஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

’தூய ஶ்ரீ லங்கா’ என்ற எண்ணக்கரு சிறந்தது. வீட்டைச் சுத்தமாக ☞ 2

## வழங்கிய மதுச்சாலை ’லைசென்ஸ்’களை நிறுத்த முடியாது என்கிறது ஆளும்தரப்பு

ஆளும்தரப்புப் புதிதாக மதுபானசாலை அனுமதிப்பத்திரங்களை வழங்கவில்லை, வழங்கப் போவதுமில்லை. சட்டரீதியில் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களை பலவந்தமான முறையில் இடைநிறுத்தினால் சட்ட சிக்கல்களை ஏற்படுத்தும். அனுமதிப்பத்திரம் சட்டரீதியில் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து அது சட்டரீதியான ஆவணமாகும். பலவந்தமான முறையில் செயற்பட முடியாது என சபை முதல்வரும், அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற ’தூய ஶ்ரீ லங்கா’ ☞ 2

## காரணம் ஏதுமின்றி கூச்சலிடும் எதிர்க்கட்சி
### பிரதமர் ஹரினி சாடல்

எதிர்க் கட்சியினர் எந்தவொரு காரணமும் இன்றி கூச்சலிடுகின்றார்கள். நாடாளுமன்றத்தில் இடம்பெறும் விவாதம் எதற்காக என்பது குறித்து புரிந்துகொள்ள முடியாதவர்களாக எதிர்க்கட்சியினர் மாறியுள்ளனர் என்று பிரதமர் கலாநிதி ஹரினி தெரிவித்துள்ளார்.

’தூய சிறீ லங்கா’ (Clean Sri Lanka) வேலைத்திட்டம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் இடம்பெறும் இரண்டு நாள் விவாதத்தின் முதல் நாளான நேற்றுக் கருத்து தெரிவித்தபோதே பிரதமர் இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்றம் கூடிய ☞ 8

## 3 நியமனங்கள்

அரச சேவையில் மூன்று சிரேஷ்ட பதவிகளுக்கான புதிய நியமனங்களுக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அதன்படி, இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் பாலித பெர்னாண்டோவை சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

எழுந்து வருகின்றது. தலைவர்கள் அதற்குக் கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.

இந்த நிலையில் தமிழ் அரசுக் கட்சியின் அரசியல்குழு இணைய வழியில் (சூம்) கூடி ஆராய்ந்திருக்கிறது. கட்சித் தலைவர் சிவஞானம், முன்னாள் தலைவர் மாவை சேனாதிராசா, செயலாளரான நாடாளுமன்ற உறுப்பினர் சத்தியலிங்கம், முன்னாள் செயலாளர் துரைராஜசிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் ஆகியோர் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

கலாசார மண்டபத்தின் பெயரிலிருந்து யாழ்ப்பாணம் என்ற பெயர் நீக்கப்பட்டதற்கு கூட்டத்தில் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. அதிலும் தமிழ் மக்களின் பிரதிநிதிகளுடன் எந்த ஆலோசனையும் கலக்கப்படாமல் தான்தோன்றித்தனமாகப் பெயர் மாற்றம் செய்யப்பட்டிருப்பது குறித்து விசனமும் கவலையும் தெரிவிக்கப்பட்டது. இருந்தாலும் இந்தியாவுடன்தொடர்புபட்ட விடயம்என்பதால் நிதானமாகவும் கவனமாகவுமே இந்த விடயத்தைக் கையாள வேண்டும் என்று கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

அதன்படி பெயர் மாற்றம் தொடர்பான கட்சியின்ஆட்சேபனையை,மாற்றுக்கருத்தை, வருத்தத்தையாழ்ப்பாணத்தில்உள்ளஇந்தியத் துணைத் தூதரகத்திடம் கையளிப்பது என்று முடிவு செய்யப்பட்டது. கட்சித் தலைவர் சிவஞானம் இந்தக் துணைத் தூதரகத்தில் நேரில்கையளித்து, கடிதத்தில் குறிப்பிடப்படாத சில விடங்கள் குறித்த நேரிலும் துணைத் தூதரிடம் கருத்துக்களைத் தெரிவிக்கவும் முடிவு செய்யப்பட்டது. சில விடங்களை எழுத்தில் தெரிவிப்பது, இந்தியாவை அரசியல் தீர்வு விடயத்தில் தலையிடக் கோரும் தமிழர்களின் முடிவுக்கு பாராதூரமான விடயமாக மாறிவிடக்கூடும் என்பதால் கடிதத்தில்கடினமானசொற்பிரயோகங்களைத் தவிர்ப்பதற்கும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குச் சொந்தமான நிலத்தில் அமைக்கப்பட்ட இந்தக் கட்டடத்தின் பெயர் சபையின் அனுமதியோ, ஆலோசனையோ இன்றியே பெயர் மாற்றப்பட்டுள்ளது. உள்ளூராட்சி சபைத் தேர்தலின் பின்னர் மக்கள் பிரதிநிதிகள் சபை அமைந்த பின்னர் கட்டடத்தின் பெயரை மீண்டும் மாற்றி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவதன் மூலம் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்றாலும் இந்தியாவைத் தடவிக் கொடுக்கும் விடயத்திலேயே தமிழ் தலைவர்கள் திடமாக இருக்கிறார்கள்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## துப்பாக்கிச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவ மேஜர் மற்றும் ஏனைய தரங்களில் உள்ள 6 அதிகாரிகள், ஒரு பொலிஸ் அதிகாரி மற்றும்ஒருசிவில்பாதுகாப்புஅதிகாரிஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர். தற்போதைய ஆளும்தரப்பு ஆட்சிக்கு வந்த பிறகு பின்வரும் ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டது.

ரி - 56 துப்பாக்கிகள் - 7, பிஸ்டல் ரக துப்பாக்கிகள் - 10, ரிவால்வர்கள் - 14, வெடிமருந்துகள் பயன்படுத்தும் துப்பாக்கிகள் - 461, போர 12 ரக துப்பாக்கிகள் - 58, கல்கடஸ் - 13, ரிப்பீட்டர்கள் - 2.

கடந்த 2 மாதங்களுக்குள் 354 கிலோகிராம் ஹெராயின், 3,847 கிலோ கிராம் கேரள கஞ்சா, 3.8 கிலோகிராம் கொக்கெய்ன், 181.9 கிலோ கிராம் ஹஷிஷ் மற்றும் 759 கிலோ கிராம் ஐஸ் போதைப்பொருள் ஆகியவையும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

நிதி குற்றப் பிரிவு அடுத்த வாரம் மீண்டும் நிறுவப்படும் அதன்படி, குற்றப் புலனாய்வு திணைக்களத்திடம் உள்ள 29,000 கோப்புகளில்இருந்துநிதிக்குற்றக்கோப்புகளை அந்தப் பிரிவிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் அமைச்சர்.

## சிலாபம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வாய் மூல விடைக்கான கேள்வி நேரத்தில் அஜித் கிஹான் எம்.பி எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிலாபம் பெருந்தோட்ட கம்பெனிக்கு சொந்தமான பகுதியில், ஒதுக்கப்பட்ட அளவை விட அதிகமாக மணல் அகழ்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது ஒரு பாரிய மோசடி என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணைகள் தற்போது இடம்பெறுகின்றன. சுமார் 400 மில்லியன் ரூபா ஊழல் கொடுக்கல் வாங்கல் மற்றும் மோசடி நடந்ததாக தெரிவிக்கப்படுகிறது. இருப்பினும் இந்த மோசடிக்கு இறுதியில் யார் பொறுப்பு என்று சொல்ல முடியாது. ஆனால் இந்த மணல் அகழ்வு மோசடிகளின் பின்னணியில் இரண்டு முக்கிய அரசியல்வாதிகள் ஈடுபட்டுள்ளனர். பல ஒப்பந்ததாரர்கள் பற்றிய தகவல்களும் கிடைத்துள்ளன என்றார்.

## 3 நியமனங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாயகமாக நியமிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

எவ்வாறாயினும், குறித்த நியமனம் ஒரு வருட காலத்திற்கு செல்லுபடியாகும் என்று அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

இதேவேளை, சந்தன சமன் ரணவீர ஆராச்சி காணி ஆணையாளர் நாயகமாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை விவசாய சேவையின் விசேட தர அதிகாரியான கலாநிதி எதிரிமான்னவை விவசாயபணிப்பாளர்நாயகமாகநியமிக்கவும் அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

## சிறிதரன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரச்சினையை முன்வைத்தார். இதற்குப் பதிலளிக்கையில் சபை முதல்வர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் முன்வைத்த சிறப்புரிமை மீறல் பிரச்சினை குறித்து விசேட கவனம் செலுத்தியுள்ளோம். இவ்விடயம் தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு விமான நிலையத் தலைவருக்குஅறிவுறுத்தியுள்ளேன்.அத்துடன் பாதுகாப்பு பிரதி அமைச்சருக்கும் இவ்விடயம் தொடர்பில்ஆராயுமாறு அறிவுறுத்தியுள்ளேன்.

நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் முன்வைத்த விடயங்கள் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்துடன் தொடர்பானவை. ஆகவே இவ்விடயம் நாடாளுமன்ற சிறப்புரிமை மீறல் குழுவில் விசாரணைக்குட்படுத்தப்படுமாயின் திணைக்களத்தை அழைக்க முடியும். நாடாளுமன்றஉறுப்பினர்சிறிதரனுக்குவிமான நிலையத்தில் ஏற்பட்ட அசௌகரியத்துக்கு வருத்தடைகிறோம்.

இந்தச் சம்பவத்தில் பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்துவதாக குறிப்பிடுவதுஅடிப்படையற்றது. இவர்நாட்டுக்கு திரும்பி வருகையில் எவ்வித சிக்கலும் ஏற்படவில்லை. ஆகவே இவ்விடயத்தில் ஆளும்தரப்பின் தலையீடு ஏதும் கிடையாது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை அமுல்படுத்த வேண்டும்என்றஅபிலாசையும், கொள்கையும் ஆளும்தரப்புக்குக் கிடையாது. இருப்பினும் மாற்றீடாக புதிய சட்டம் இயற்றப்படும்வரை இந்த சட்டத்தை கவனமான முறையில் பொதுப் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு அமுல்படுத்த நேரிடும் என்றார்.

## ஹக்கீம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறப்புரிமைமீறல்பிரச்சினையைமுன்வைத்த நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன், அச்சந்தர்ப்பத்தில் விமான நிலையத்தில் தன்னுடன் நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் இருந்தார் எனவும், அவர் விமான நிலைய அதிகாரிகளுடன் பேசிய பின்னரே தனது பயணத்தைத் தொடர அனுமதிக்கப்பட்டது எனவும் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து உரையாற்றிய ரவூப் ஹக்கீம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் உரையாற்றியதாவது:

தமிழ்நாட்டு முதலமைச்சரின் அழைப்புக் கமைய அயலகத் தமிழர் நிகழ்வில் நானும் கலந்துக்கொண்டேன். விமான நிலையத்தில் பிரபுக்கள் முனையத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோதுநானும்அவ்விடத்தில் இருந்தேன்.

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் அதிகாரிகள் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனைத் தடுத்து வைத்து அவருக்கு எதிராகப் பயணத்தடை விதிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டனர்.

பயணத்தடை விதிக்கப்பட்டிருந்தால் அதற்கான வழக்கினை குறிப்பிடவேண்டும். ஆனால் அதிகாரிகள் அவ்வாறு எதனையும் குறிப்பிடவில்லை. பயங்கரவாத தடைச் சட்டத்தை இரத்துச் செய்வதாக ஆளும்தரப்புக் குறிப்பிட்டது. ஆனால் இதுவரை அச்சட்டம் நீக்கப்படவில்லை.

இந்தச் சட்டத்தின் பிரகாரம் செயற்படுவது தவறானது. விமான நிலையத்தில் அதிகாரிகளுடன் பேச்சு நடத்தி சமரசத்துக்கு வந்தோம். நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனின் உரிமை மற்றும் சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது. அவருக்கு பெரும் அநீதி இழைக்கப்பட்டுள்ளது. ஆகவே முறையான விசாரணைகளை மேற்கொண்டு நியாயத்தை வழங்குங்கள் என்றார்.

## இன ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்திப்பதற்கு நாம் விரும்புவதைப் போன்று நாட்டை சுத்தமாக வைத்திருக்கவும் விரும்புகின்றோம். அந்த வகையில் இந்த 'தூய ஸ்ரீ லங்கா' திட்டம் நல்ல விடயமே. எமது நாடு இலஞ்சம், ஊழல், மோசடி, திருட்டு மற்றும் குற்றச்செயல்கள் என பல முறையற்ற செயற்பாடுகளினால் சூழ்ந்துள்ளது. கடந்த 77 வருடங்களாக நாட்டை ஆட்சி செய்தவர்கள் நாட்டில் சுத்தத்தை ஏற்படுத்தவில்லை என்பது 'தூய ஸ்ரீ லங்கா' என்ற திட்டத்தின் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றது.

இதனால் தூய்மையான விடயங்களை நாங்கள் ஆதரித்தே ஆகவேண்டும். ஊழல், மோசடி, திருட்டு மற்றும் வீண் விரயம் இல்லாத நாட்டை உருவாக்குவதற்கு அனைவரும் விரும்புவர் என்றே நம்புகின்றோம். கடந்த காலங்களில் பல குற்றச் செயல்கள் இடம்பெற்றுள்ளன. ஆனால் குற்றவாளிகள் கைது செய்யப்படவும், தண்டிக்கப்படவும் இல்லை என்ற குற்றச்சாட்டுகளும் உள்ளன.

பெரும் குற்றங்களைச் செய்துவிட்டு கௌரவர்களாக அவர்கள் உலா வருவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இதனால் இந்த விடயமும் 'தூய ஸ்ரீ லங்கா' திட்டத்திற்குள் உள்வாங்கப்படவேண்டும். இந்த நாடு தூய்மையாக இருந்திருந்தால் புத்திஜீவிகள் நாட்டைவிட்டுப் போயிருக்க மாட்டார்கள்.

இனவாதம், மதவாதம், மொழிவாதம் மற்றும் பிரதேசவாதம் என்று பல கூறுகளால் நாடு அசுத்தமாக்கப்பட்டுள்ளது. இந்த கூறுகளை வைத்துக்கொண்டுதான் ஆட்சியாளர்கள் தேர்தலில் பரப்புரை செய்தனர். ஆனால் கடந்த காலத்தில் தேர்தல் பரப்புரையில் இந்த அடிப்படைவாதங்கள் செல்லுபடியற்றதாகியுள்ளது. மக்கள் சிறந்த மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளார்கள். இதனைப் பயன்படுத்தி நீங்கள் சுத்தமான நாட்டை உருவாக்க நடவடிக்கை எடுத்தால் நாங்கள் சுத்தமான வீட்டை விரும்பும் கட்சிக்காரர்கள் என்ற வகையில் அதனை ஆதரிக்கத் தயாராக இருக்கின்றோம்.

அதேவேளை இந்த விடயம் செயற்பாட்டு வடிவத்தை பெறவேண்டும். சொல்வது இலகுவானதுதான் ஆனால் அதனை செயற்படுத்துவதே கடினமாக இருக்கும். எவ்வாறாயினும் இந்த விடயத்தை அமுல்படுத்தி ஊழல் மோசடியற்ற. போதையற்ற மற்றும் குற்றவாளியற்ற நாட்டைஉருவாக்குவது ஆரோக்கியமானதாக இருக்கும். இதற்காக இன, மத ரீதியான சட்டதிட்டங்கள் தீட்டப்படுவதை அகற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

இதேவேளை விவசாயிகள் விடயத்திலும் இந்த வேலைத்திட்டத்தில் அவர்களின் உற்பத்திகளுக்கு உத்தரவாத விலைகளை வழங்கவேண்டும். இல்லாவிட்டால் விவசாயிகள் பயிர் செய்கைகளில் இருந்து விலகும் நிலைமை ஏற்படலாம். அத்துடன் தற்போது வெள்ளப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

கிரான் பாலத்தை புனரமைப்பு செய்து அங்கே கஸ்ட பிரதேசங்களில் உள்ள மக்களுக்கு நிவாரணங்களை கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். மோசமான பாதைகளும் உள்ளன. வாகரை பிரதேசத்தில் கட்டுமுறிவு பாதை காட்டு வழி பாதையாகும். அங்கே யானைகளின் அச்சுறுத்தல் உள்ளன. அங்கே பழங்குடி மக்கள் மற்றும் மீனவர்கள் வசிக்கின்றனர். கிளீன் ஷ்ரீலங்கா திட்டத்தில் அந்த பாதை புணரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுடன் மூங்கிலாற்று வீதியையும் புனரமைக்க வேண்டும் என்று கோருகின்றேன் என்றார்.

## செந்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உட்கட்டமைப்பு அமைச்சர் சமந்த வித்யாரத்ன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற 'தூய ஸ்ரீலங்கா' செயற்திட்டம் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறந்த மாற்றத்துக்காகவே 'தூய ஸ்ரீ லங்கா' செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. தூய்மை பற்றி பேசுவதற்கு ஆளும்தரப்புக்கு தார்மீக உரிமையில்லை என்று எதிர்தரப்பினர் குறிப்பிடுகிறார்கள்.

## வழங்கிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயற்திட்டம் மீதான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரன், 'கல்முனை - நீலாவணை பகுதியில் புதிதாக மதுபான நிலையங்களை திறப்பதற்கு எடுத்துள்ள நடவடிக்கைகளுக்கு அப்பிரதேச மக்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளதை சபையின் கவனத்திற்குக் கொண்டு வந்தார். கடந்த ஆளும்தரப்பு வழங்கிய மதுபானசாலை அனுமதிப்பத்திரங்களை இரத்துச் செய்வதாக தேசிய மக்கள் சக்தி குறிப்பிட்டது. ஆனால் இதுவரை அதற்கான நடவடிக்கைகள் ஏதும் எடுக்கப்படவில்லை என்று குற்றஞ்சாட்டினார்.

இதற்குப் பதிலளித்தபோதே சபை முதல்வர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேசிய மக்கள் சக்தி தலைமையிலான எமது ஆளும்தரப்பு புதிதாக மதுபானசாலை அனுமதிப் பத்திரங்கள் ஏதும் விநியோகிக் கவில்லை. முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் பெரும்பாலான மதுபானசாலை அனுமதி பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் மதுபானசாலை பத்திரங்கள் குறித்து நாடாளுமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு ஹன்சாட்டில் பதியப்பட்டுள்ளது.

அனுமதிப்பத்திரம் சட்டரீதியில் வழங்கப் பட்டதைத் தொடர்ந்து அது சட்டரீதியான ஆவணமாகக் கருதப்படும். அரசியல் ரீதியில் விருப்பம் இல்லாவிடினும், அதனை இரத்து செய்வது சட்ட செயற்பாடாகும். ஆளும்தரப்பால் பலவந்தமாக அதனைச் செய்யமுடியாது.

இருப்பினும் நிர்வாகக் கட்டமைப்பில் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். இவ்வாறான பழைய குப்பை மேடுகளை தூய்மையாக்கவே முயற்சிக்கிறோம். இதுவே செய்த அழிவாகும். எமது ஆளும்தரப்பு புதிதாக மதுபானசாலை அனுமதிப்பத்திரங்களை வழங்கபோவதில்லை.

சட்டரீதியில் வழங்கப்பட்ட அனுமதி பத்திரங்களை பலவந்தமான முறையில் இடைநிறுத்தினால் சட்ட சிக்கல்களை ஏற்படுத்தும். இருப்பினும் நிர்வாகம் மற்றும் சமூக கட்டமைப்பில் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்றார்.

## ஆளும்தரப்பினர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேவையில்லை. ஆனால் இன்னும் 6 மாதங்களில்ஆளும்தரப்பில்இருப்பவர்களுக்கு பாதுகாப்புத் தேவைப்படும் என எதிர்க்கட்சி உறு ப்பினர் ஷாமர சம்பத் தெரிவித்தார்.

அவர் நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற 'தூய சிறிலங்கா' வேலைத் திட்டம் தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார். மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி களுத்தறையில் பேசிய

தொடர்ச்சி 8ம் பக்கம்....

# யாழ். கலாசார நிலையப் பெயர் மாற்றம் மக்களின் நாடித்துடிப்பு அறியாத செயல்

## ஐங்கரநேசன் ஆதங்கம்



இந்திய அரசாங்கத்தின் நன்கொடையின் கீழ் கலாசார பாரம்பரியங்களின் மேம்பாட்டுக்காக நிர்மாணிக்கப்பட்டதும் தனித்துவமிக்கதுமான யாழ்ப்பாண கலாசார நிலையம் 2023 பெப்ரவரி முதலாம் திகதி மக்களுக்கு உரித்தாக்கப்பட்டது.

திறப்புவிழாக் கல்வெட்டில் அழியாத எழுத்துகளால் அழகாகப் பொறிக்கப்பட்டிருக்கும் வாசகம் இது. ஆனால், மக்களுக்கு உரித்தாக்கப்பட்டு இரண்டு வருடங்கள்கூடக் கடக்காத நிலையில் அம்மக்களின் அபிப்பிராயங்கள் எதுவும் பெறப்படாது யாழ்ப்பாண கலாசார நிலையம் திருவள்ளுவர் கலாசார நிலையம் எனப் பெயர் மாற்றப்பட்டுள்ளது.

இது மக்களின் நாடித்துடிப்பு அறியாத செயல் என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

யாழ். கலாசார நிலையத்தின் பெயர் மாற்றம் குறித்து பொ.ஐங்கரநேசன் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

அந்த ஊடக அறிக்கையில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

யாழ்ப்பாண கலாசார நிலையம் யாழ். மாநகரசபைக்கு உரித்தான காணியில் இந்திய அரசின் நன்கொடையில் உருவானது. இதற்கான உடன்படிக்கையில் யாழ். கலாசார நிலையத்தை முகாமைத்துவம் செய்கின்ற குழுவில் யாழ் மாநகரசபையினதும்; வடமாகாண சபையினதும் சார்பில் ஒவ்வொருவர் இடம்பெறுவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், இரண்டுசபைகளினதும் கலந்தாலோசிப்புகளின்றி இப்பெயர் மாற்றம் இடம்பெற்றுள்ளது.

கோட்டாபய அரசாங்கம் யாழ். கலாசார நிலையத்தின் பெயரை மாற்றுமாறு முன்னர் அழுத்தங்களைப் பிரயோகித்தபோது மாநகரசபையின் எதிர்ப்பால் கைவிடப்பட்டது. இப்போது, இரு சபைகளுக்குமான தேர்தல்கள் நடைபெறவுள்ள நிலையில் திடுதிப்பென்று நிகழ்ந்த இப்பெயர் மாற்றம் இலங்கை அரசாங்கத்தின் கோரிக்கையை இந்தியா நாசுக்காக நிறைவேற்றிக் கொடுத்துள்ளது என்றே எண்ணவைத்துள்ளது.

சமயச்சாயத்தை தன் மீது ஒருபோதும் பூசிக்கொள்ளாத திருவள்ளுவரின் பெருமையை ஈழத்தமிழ் மக்கள் எப்போதும் போற்றுபவர்களாகவே உள்ளார்கள். அவர் தமிழுக்குத்தந்த பெரும் கொடையாம் திருக்குறளின் மகிமையை ஈழத்தமிழ் மக்கள் ஒரு போதும் மறவார்கள். இதனாலேயே தமிழகத்தில் வள்ளுவர் கோட்டத்தில் உள்ளதைப்போன்று அத்தனை குறள்களையும் காலத்தால் அழியாதவாறு கருங்கல்லில் பொறித்து திருக்குறள் வளாகம் ஒன்றைச் சிவபூமி தாபகர் கலாநிதி ஆறுதிருமுருகன் யாழ்ப்பாணத்தில் உருவாக்கியுள்ளார்.

ஆனால் இத்தகைய பெரும்பற்றைத் திருவள்ளுவர் மீதும் திருக்குறள் மீதும் கொண்டிருக்கும் ஈழத்தமிழ் மக்களிடையே யாழ்.கலாச்சார மையத்துக்கு அவர் பெயரைச் சூட்டியுள்ளமை பெரும் அதிருப்தியையே தோற்றுவித்துள்ளது.

யாழ். கலாசார மையம் தனித்துவமானதெனத் திறப்புவிழாக் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளதைப் போன்று அது இந்தியா எமக்கு உவந்தளித்த தனித்துவமான பெரும் கொடையே ஆகும். ஆனால், அதன் தனித்துவம் நெடிதுயர்ந்த அழகான அதன் கட்டுமானங்களால் மாத்திரம் உருவானதன்று. பண்பாட்டுச் செழுமையும் பாரம்பரியமும் மிக்க யாழ்ப்பாணம் என்ற பெயரைச் சூடியிருப்பதும் அதன் தனித்துவத்தை வெளிப்படுத்தும் அளப்பரிய ஓர் சிறப்பாகும்.

இப்போது, பெயர் மாற்றப்பட்டிருப்பதன் மூலம் அதன் தனித்துவம் ஒருபடி கீழிறங்கியுள்ளது என்பதே நிதர்சனம். அது மட்டுமல்ல, இப்பெயர் மாற்றத்தின் மூலம் ஈழத்தமிழ் மக்கள் இந்தியா மீது கொண்டிருக்கும் பெரும் நம்பிக்கையிலும் ஒரு படி கீழிறங்கியுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# திருடப்பட்ட மாட்டிறைச்சியுடன் வளத்தாப்பிட்டியில் ஒருவர் கைது

## வெட்டுவதற்கு பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள் மீட்பு

(தில்சாத் பர்வீஸ்)



திருடிய மாட்டினை இறைச்சியாக வெட்டும் போதே சந்தேக நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர். அத்தோடு மாட்டினை வெட்டுவதற்கு பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களையும் சம்மாந்துறை பொலிஸ் நிலைய பெருங்குற்றப்பிரிவு அதிகாரிகள் கைப்பற்றி உள்ளனர்.

இச்சம்பவம் நேற்று (செவ்வாய்க்கிழமை) அதிகாலையில் நடைபெற்றுள்ளது.

அம்பாறை மாவட்டம், சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வளத்தாப்பிட்டி பகுதியில் மாட்டிறைச்சியுடன் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை வேளையில் சம்மாந்துறை பொலிஸ் நிலைய பெருங்குற்றப்பிரிவு அதிகாரிகளால் குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வளத்தாப்பிட்டி பிரதேசத்தில் மேய்ச்சலுக்கு சென்ற ஏழு மாதத்திற்கு உட்பட்ட கன்று இரவு வேளையாகியும் வீடுவரவில்லை என பொலிஸ் நிலையத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை வேளையில் மாட்டு உரிமையாளர் முறைப்பாடு செய்யதாக சம்மாந்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சந்தேக நபர் தொடர்பான தேடுதலை மேற்கொண்ட பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் சந்தேக நபரின் வீட்டினை சோதனை செய்த போது அறை ஒன்றினுள் மாட்டை அறுத்து இறைச்சியாக்கும் சந்தர்ப்பத்தில் மாட்டிறைச்சியுடன் 32 வயதுடைய சந்தேக நபர் ஒருவரை கைது செய்யப்பட்டுள்ளதோடு மாட்டினை வெட்டுவதற்கு பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களையும் மீட்டுள்ளனர்.

இவ்வாறு கைதான சந்தேக நபரிடம் இருந்து 47 கிலோ 600 கிராம் மாட்டிறைச்சி மீட்கப்பட்டதுடன், சந்தேக நபர் மற்றும் மாட்டினை வெட்டுவதற்கு பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள் உள்ளிட்ட சான்றுப்பொருள்களை சட்ட நடவடிக்கைக்காக சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இச்சம்பவம் தொடர்பில், புதிய வளத்தாப்பிட்டி பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய சந்தேக நபரை நேற்;று செவ்வாய்க்கிழமை அதிகாலை வேளையில் கைது செய்ததுடன் குறித்த கைது நடவடிக்கையானது திருட்டுச் சம்பவம் நடைபெற்று ஒரு மணித்தியாலயத்திற்கு இடையில் கைதுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன், குறித்த சோதனை நடவடிக்கையானது சம்மாந்துறை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி ஏ.எம்.நௌபரின் வழிகாட்டுதலில் பொலிஸ் நிலைய பெருங்குற்றப்பிரிவு பொறுப்பதிகாரி கே.சதீஸ்கர் தலைமையிலான சார்ஜன் டபிள்யூ.ஏ. சரத், சார்ஜன் ஜி.எம். உபாலி பொலிஸ் உத்தியோகத்தர்களான எம். நிரஞ்சன், ஜிஹான், கிருசாந்தன் உள்ளிட்ட குழுவினர் இச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மஹ்மூத் மகளிர் கல்லூரியினது பெறுபேற்றை அதிகரிக்க திட்டம்

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை) க.பொ.த (சஃத) - 2024 தொகுதி மாணவிகளின் பெறுபேறுகளை மேம்படுத்தும் நோக்கில் பாட ரீதியிலான கருத்தரங்குகளை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு அப்பிரிவின் பகுதித்தலைவர் ஏ.ஆர்.எம். நளீம் தலைமையில் திங்கட்கிழமை சேர் ராஸிக் பரீட் மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கல்லூரியின் முதல்வர் ஏ.பி. நஸ்மியா சனூஸ் கலந்து கொண்டு மாணவிகளுக்கு சிறந்த அறிவுரை, ஆலோசனைகளையும் வழங்கினார். பாட ரீதியிலான கருத்தரங்குகள் கல்லூரியின் சிரேஷ்ட ஆசிரியர்களின் வழிகாட்டல்களில் பல்லூடகம் இலத்திரனியல் தொழில்நுட்ப உதவிகளுடன் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

கடந்த வருடம் இப்பாடசாலையில் இருந்து 26 மாணவிகள் ஒன்பது பாடங்களிலும் ஏ சித்தி பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.





காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவது எப்பபோது?

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை அமுல்படுத்த வேண்டும் என்ற அபிலாசையும், கொள்கையும் ஆளும்தரப்புக்குக் கிடையாது. இருப்பினும்மாற்றீடாகபுதியசட்டம்இயற்றப்படும்வரைஇந்தசட்டத்தை கவனமான முறையில் பொதுப் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு அமுல்படுத்த நேரிடும் என்று தெரிவித்திருக்கிறார் தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பின் சபை முதல்வர், அமைச்சர் பிமல் ரத்நாயக்க. நாடாளுமன்றத்தில் நேற்று இதனைத் தெரிவித்தார்.

தமிழ் அரசுக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன், கடந்த வாரம் தமிழ்நாடு செல்லும் வழியில் கட்டுநாயக்கா வானூர்தி நிலையத்தில் குடியகல்வுக் கட்டுப்பாட்டு அதிகாரிகளால் தடுத்து நிறுத்தப்பட்டது குறித்த சிறப்புரிமை மீறல் பிரச்சினைக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பில் ஆளும்தரப்பின் நிலைப்பாடு இதுதான் என்பதையே சபை முதல்வரின் கூற்று நிரூபிக்கின்றது. தேசிய மக்கள் சக்தி ஆட்சியைப் பிடித்த உடனேயே இந்த விவகாரத்தில் சர்ச்சை வெடித்தது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தில்பிரச்சினை இல்லை, அதனைப்பயன்படுத்துவோரிலேயே கடந்த காலங்களில் பிரச்சினைகள் இருந்தன, அதனைச் சரிவரப் பயன்படுத்தினால் பிரச்சினை இல்லை என்று ஆளும் தரப்பிலிருந்து தெரிவிக்கப்பட்ட கருத்து பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. அப்போது இந்தச் சட்டத்தை நீக்கவேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே ஆளும்தரப்பு இருப்பதாகச் சொல்லிச் சமாளிக்கப்பட்டது.

ஆனால், இப்போது அமைச்சர் பிமல் ரத்நாயக்க, மாற்றீடாக புதிய சட்டம் இயற்றப்படும்வரை இந்த சட்டத்தை கவனமான முறையில் பொதுப் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு அமுல்படுத்த நேரிடும் என்கிறார். ஆனால் புதிய சட்டம் எப்போது கொண்டுவரப்படும் என்று அவர் எதனையும் தெரிவிக்கவில்லை. புதிய சட்டம் ஒன்றைக் கொண்டுவரும் முன்முயற்சிகளிலும் ஆளும்தரப்பு ஈடுபாடு காட்டவில்லை. அது பற்றி வலியுறுத்தினால், புதிய அரசமைப்பின்போது எல்லாவற்றையும் மாற்றலாம் என்று சாக்குப்போக்குச் சொல்லக்கூடும். இது தேசிய மக்கள் சக்தியிடம் இருந்து எதிர்பார்க்கப்பட்டதல்ல.

அதற்குக் காரணம் ஆட்சிக்கு வரும் வரையும் இந்தச் சட்டத்தைக் கடுமையாக எதிர்த்தது தேசிய மக்கள் சக்தி. முக்கியமாக அரசுத் தலைவர் அநுரகுமார திசநாயக்க இந்த விடயத்தில் முன்னின்று செயற்பட்டிருந்தார். இந்தச் சட்டத்தை எதிர்த்து தமிழ் அரசுக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் இலங்கை முழுவதும் நடத்திய கையெழுத்துச் சேகரிப்பு இயக்கத்தில்/ போராட்டத்தில் தெற்கின் பல இடங்களிலும் அவருக்கு ஒத்துழைப்பு வழங்கியது தேசிய மக்கள் சக்தியைச் சேர்ந்தவர்களே. அதுவும்போக நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த அநுரகுமார பல தடவைகள் இந்தச் சட்டத்தை நீக்க வலியுறுத்தி உரையாற்றியிருக்கிறார்.

அதற்குக் காரணம் இந்தச் சட்டத்தின் பயங்கரத் தன்மையும், அது அடக்குமுறையாளர்களின் ஆயுதமாகப் பயன்படுத்தப்படக்கூடிய வாய்ப்புக்களைக் கொண்டிருப்பதும்தான். அப்படிப்பட்ட சட்டதை நீக்குவோம் என்று கூறிக்கொண்டு ஆட்சிக்கு வந்த தேசிய மக்கள் சக்தி இப்போது, புதிய சட்டத்தைக் கொண்டுவரும்போது இருக்கும் சட்டத்தை நீக்குவோம் என்று விட்டேத்தியாகப் பதிலளிப்பது ஏற்புடையதல்ல. கண்டிக்கத்தக்கது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கும் வகையில் புதிய சட்டத்தை, அடக்குமுறையற்ற சட்டத்ததை, உலக நியமத்திற்கு ஏற்ற சட்டத்தை உருவாக்குவதற்கான உடனடி முயற்சிகளை எடுக்க வேண்டும். ரணில் விக்கிரமசிங்கவினால் மிகக் குறுகிய காலத்தில் பல சட்டங்களைத் திருத்தவும் புதிதாகவும் நடைமுறைப்படுத்த முடியுமானால் தேசிய மக்கள் சக்தியினால் ஒரு சட்டத்தைக்கூடவா விரைவாக அறிமுகப்படுத்த முடியாது. அதுவும்போக பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்குப் பதிலான புதிய சட்டத்திற்கான வரைவுகள் ஏற்கனவே தயாரிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் சில பகுதிகளுக்குத் தொடர்ந்தும் எதிர்ப்புக்கள் இருக்கின்றன. அவற்றை நீக்கி, தேவையான புதிய சட்டங்களை இயற்குவதற்கு மிகப் பெரிய கால அவகாசம் ஒன்று தேவையில்லை. எனவே புதிய காரணங்களைக் கூறிக்கொண்டு, தமது தேவைக்கு ஏற்ப அந்தச் சட்டத்தைப் பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிருப்பாமல் ஆளும்தரப்பு செயற்படவேண்டும்.



## ரணிலின் நிழலிருந்து அநுரவால் வெளியேறி வந்துவிட முடியுமா?

அம்பாந்தோட்டை துறைமுகத் திட்டத்தை கடுமையாக விமர்சித்த ரணில் விக்ரமசிங்கே 2015 இல் பிரதமரானார், ஆனால், அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகளை ஆச்சரியப்படுத்தும் வகையில், அதே அம்பாந்தோட்டைத்துறைமுகத்தை சீனாவிற்குக் குத்தகைக்குவிட முடிவு செய்தார். ரணில் ஒரு பிரபலமான அமெரிக்க சார்பு தலைவர்.

சீனா தந்த கடனில் துறைமுகத்தை கட்டிய போதிலும், சீன சார்பு ராஜபக்சே குடும்பம் துறைமுகத்தை சீனாவிற்கு குத்தகைக்குவிட ஒருபோதும் முடிவு செய்யவில்லை. ரணிலே அந்த முடிவை எடுத்தார். அது ரணிலின் 'நல்லாட்சி' ஆளும்தரப்பின் வீழ்ச்சியின் தொடக்கத்தைக் குறித்தது. 2017 ஜூலையில் இது தொடர்பான ஒரு குத்தகை ஒப்பந்தம் கையெழுத்தானது

2018 வாக்கில், ரணிலின் ஆளும்தரப்பு மத்திய வங்கி பிணைமுறி மோசடி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகளில் நின்றுகொண்டிருந்தது. அதைப் பயன்படுத்தி 2018இல் மைத்ரி ரணிலை பிரதமர் பதவியில் இருந்து நீக்கினார். துறைமுகத்தை குத்தகைக்கு விட்டு 'கெத்து' காட்டிய ரணிலை அந்தக் காலத்து புவிசார் அரசியல் சூழல் தவழும் நிலைக்குத் தள்ளியது.

துறைமுகத்தை குத்தகைக்கு விட்ட ரணில், பின்னர் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை கட்டுவதற்கான கேள்வி கோரல்களை விடுத்தார். சீனாவின் சினோபெக் நிறுவனமே விண்ணப்பித்தது. சீனாவுக்கு துறைமுகத்தை குத்தகைக்குக் கொடுத்ததால் அமெரிக்காவும் இந்தியாவும் தன் மீது கோபமடைந்ததை அறிந்த ரணில், சினோபெக்கை நிராகரித்தார், அதுமட்டுமல்ல அந்தச் சுத்திகரிப்பு நிலையத்திற்கான ஏலம் இந்திய நிறுவனம் ஒன்றுக்கு வழங்கப்பட்டது. வெளிப் பார்வைக்கு ஓமானைத் தளமாகக் கொண்ட சிங்கப்பூர் நிறுவனமே ஏலம் எடுத்ததைப் போல இருந்தாலும் இந்திய, தமிழ்நாட்டு தொழிலதிபருடன் தொடர்புடைய ஒரு நிறுவனத்திற்கே அது வழங்கப்பட்டது.

இந்த ஓமான் நிறுவனத்தின் முதலீடு இலங்கையின் மிகப்பெரிய முதலீடு என்று ரணிலின் ஆளும்தரப்பு பரப்புரை செய்தது. இருப்பினும், இந்த நிறுவனம் பின்னர் திட்டத்தைக் கைவிட்டது, ஆனால் சீனா இந்தத் திட்டத்தில் முதலீடு செய்வதில் தொடர்ந்து ஆர்வம் காட்டியது.

2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் அம்பாந்தோட்டை துறைமுகத்தைச் சீனாவிற்கு குத்தகைக்குக் கொடுத்த ஒப்பந்தத்தை இல்லாது செய்வதாக உறுதியளிக்கப்பட்டது. ஜனாதிபதியானதும் அவரது இந்தியாவிற்கான பயணத்தின்போது, ஒரு பத்திரிகையாளர் அவரிடம் இந்த வாக்குறுதி குறித்துக் கேட்டார், ஆனால் அவர் அந்தக் கேள்விக்குப் பதிலளிப்பதைத் தவிர்த்துவிட்டார்.

கோட்டாவின் ஆட்சிக் காலத்திலும் ஒரு சுத்திகரிப்பு நிலையத்தை அமைப்பதற்கான சீன முதலீட்டு சலுகை கிட்டியபோதிலும், அது இந்தியா மற்றும் அமெரிக்காவுடனான உறவுகளை பாதிக்கக்கூடும் என்ற அச்சம் காரணமாக அவரால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

கோட்டா 2022இல் தப்பி ஓடிய பிறகு, ரணில் ஜனாதிபதியானார், சீனா இந்த திட்டத்தை மீண்டும் அறிமுகப்படுத்தியது. இருப்பினும், அந்த நேரத்தில் நாடு திவாலானதால், ரணில் இந்த சலுகையை ஆதரிக்கவில்லை. நவம்பர் 28, 2023 அன்று, சீன நிறுவனமான சினோபெக்கின் 4.5 பில்லியன் அமெரிக்க டொலர் மதிப்புள்ள சுத்திகரிப்புத் திட்டத்திற்கான அமைச்சரவைப் பத்திரத்தை ரணில் சமர்ப்பித்தார். இது ஒக்டோபர் 2023 இல் அவர் சீனாவிற்குச் சென்று வந்ததைத் தொடர்ந்து நிகழ்ந்தது.

அந்தத்திட்டத்தை ரணில்விக்கிரமசிங்க முழுமையாக ஆதரித்தார். அமைச்சரவை ஒப்புதலைப் பெற்றபிறகு இந்த ஒப்பந்தத்தை இறுதி செய்யத் திட்டமிடப்பட்டது, ஆனால் 2024இல் ஜனாதிபதித் தேர்தல் வர இருந்ததன் காரணமாக இரு தரப்பினரும் உற்சாகம் காட்டவில்லை. இந்தியா மற்றும் அமெரிக்காவின் எதிர்வினைக்கு அஞ்சி ரணில் தயங்கியிருக்கலாம், அதேநேரத்தில் ரணிலின் மீண்டும் தேர்தலில் போட்டியிடக்கூடிய வாய்ப்புகளைச் சுற்றியிருந்த நிச்சயமற்ற தன்மையைக் கருத்தில் கொண்டு சீனாவும் தயக்கம் காட்டியிருக்கலாம்.

ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அநுரகுமார திசநாயக்க 2024இல் சீனாவிற்குச் சென்றபோது ரணிலின்

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

காலைக்கதிர் Kalaikkathir

# ரணிலின்...

4ம் பக்கத் தொடர்ச்சி...........

அமைச்சரவை ஏற்கனவே அனுமதித்திருந்த எண்ணெய்சுத்திகரிப்புத்திட்டத்தில்கையெழுத்திட ஒப்புக்கொண்டார். அநுரவின் ஆளும்தரப்பு இப்போது இதை தமது சீன உறவின் மூலம் கிடைத்த ஒரு பெரிய வெற்றியாகக் கூறுகிறது. இருப்பினும், இந்தச் சீன முதலீடு 2017இல் துறைமுகக் குத்தகை கையெழுத்திட்ட கையோடு கொண்டுவரப்பட்டது என்பதை இப்போது யாரும் ஏற்கத் தயாராக இல்லை. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், இந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் ரணிலின் உருவாக்கம்.

**இப்படி ரணிலின் ஆளும்தரப்பின் திட்டங்களை தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு ஏன் செயல்படுத்துகிறது?**

ஒரு புதிய ஆளும்தரப்பு பதவியேற்றதும், நாடுகளுக்கு இடையிலான இருதரப்பு ஒப்பந்தத்தை இல்லாது செய்வது பொதுவாக நெறிமுறையற்றதாகக் கருதப்படுகிறது. எனவே, அநுரவின் ஆளும்தரப்பால் இந்த திட்ட திட்டத்தில் கையெழுத்திடுவதை மறுக்க முடிந்திருக்காது. ஜனாதிபதித் தேர்தலில் ரணில், சஜித் அல்லது அனுர வெற்றி பெற்றாலும், இந்த ஒப்பந்தம் இறுதி செய்யப்படும் என்று சீனாவிற்குத் தெரிந்தே இருந்தது.

அநுரஇந்தஒப்பந்தத்தில்கையெழுத்திட்டபோது, ஆளும்தரப்பு இந்தியாவையும் சீனாவையும் சமநிலைப்படுத்தும் ஒரு நடவடிக்கையையும் ஏற்படுத்தியது. மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் குமார ஜெயக்கொடி திருகோணமலை எண்ணெய் தொட்டிகளைப் பார்வையிட்டு, எண்ணெய் தொட்டிகளை மேம்படுத்துவதற்காக கோட்டாவின் ஆளும்தரப்பு இந்தியாவுடன் எட்டிய ஒப்பந்தம் தொடங்கப்படும் என்று உறுதியளித்தார்.

திருகோணமலை எண்ணெய் குதங்களை மேம்பாட்டுத் திட்டம் கோட்டாபயவின் ஆளும்தரப்பினால் தொடங்கப்பட்டது. அதற்கான அமைச்சரவைப் பத்திரமும் சமர்ப்பிக்கப்பட்டது. அதற்கான ஒப்பந்தத்தில் அப்போதைய எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில கையெழுத்திட்டார். இருப்பினும், இந்தியாவிற்கு எண்ணெய் தொட்டிகளை குத்தகைக்கு எடுக்கும் திட்டம் 2017இல் ரணிலால் தொடங்கப்பட்டது.

2017இல் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை சீனாவிற்கு குத்தகைக்கு விட்டதன் மூலம் மகிழ்ச்சியற்றிருந்த இந்தியாவைச் சமாளிக்கவே ரணிலின் ஆளும்தரப்பு இந்தியாவிற்கு திருகோணமலை எண்ணெய் குதங்களை குத்தகைக்குவிட ஒப்புக்கொண்டது. ரணிலால் இதைத் தொடங்க முடியவில்லை. இருப்பினும், கோட்டாஜனாதிபதியானபோது, எரிபொருள்துறை அமைச்சர் உதயகம்மன்பில, ரணில் நிறுத்திய இடத்திலிருந்து இந்தியாவுடனான இந்த ஒப்பந்தத்தைத் தொடர ஒப்புக்கொண்டார்.

இதன் முரண்பாடு என்னவென்றால், 2017ஆம் ஆண்டில், ரணில் இந்தியாவிற்கு எண்ணெய்க் குதங்களை குத்தகைக்குவிட ஒப்புக்கொண்டபோது, உதயகம்மன்பில எண்ணெய்க் குதங்கள் இந்தியாவிற்கு விற்கப்படுவதாகக் கூறி கூக்குரலிட்டார். எதிர்க்கட்சியில் இருந்த மஹிந்த ராஜபக்சவும் பொதுஜன பெரமுனவினரும் அதே கூக்குரலைஎழுப்பினர், அவர்கள் ஆட்சிக்கு வந்ததும், தேசிய சொத்துக்கள் மீட்கப்படும் என்று கூறினர். ஆனால் கோட்டாஜனாதிபதியானபோது, முன்னர் தனது கால்களை உதைத்து எண்ணெய் குதங்களின் ஒப்பந்தத்தை எதிர்த்த உதயகம்மன்பிலவே அதில் கையெழுத்திட்டார்.

கடைசியில் எண்ணெய் மற்றும் எரிவாயு பற்றாக்குறை காரணமாக கோட்டா வீட்டிற்குச் செல்ல வேண்டியிருந்தது. 2019 ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பு மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளைஜனாதிபதியானதும் கோட்டாபய மீறியதும் அவர் மீதான மக்களின் வெறுப்புக்கு ஒரு காரணமாக அமைந்தது. அவற்றில் ஒன்று எண்ணெய்க் குதங்களை குத்தகைக்கு விட்டது. பொது ஜன பெரமுனவிற்கு வாக்களித்தவர்கள் இலங்கைக்கு எதிரான 'பையாக்கள்' என்று அழைக்கப்படுகிறார்கள். 'பையா' அணிவது எளிது. ஆனால் 'பையாக்கள்' தாங்கள் 'பையாக்கள்' அணிந்திருப்பதை உணரும்போது, விளைவுகள் கடுமையானவை. கோட்டாவுக்கும் அதுதான் நடந்தது. 'பையாக்களின்' வாக்குகளிலிருந்து வந்த தேசிய மக்கள் சக்திக்கும் இது ஒரு நல்ல பாடமாகும்.

# மருதமுனை முதலாவது நீதிபதியின் சேவையைப் பாராட்டி கௌரவிப்பு

(ஷினாஸ்)

நீதிச்சேவையில் 34 ஆண்டுகள் கடமையாற்றி ஓய்வு பெற்று செல்லும் மருதமுனையின் முதலாவது நீதிபதி ரி.எல்.அப்துல் மனாப் அவர்களின் சேவையை பாராட்டி மருதமுனை சட்டத்தரணிகள் சங்கம் ஏற்பாடு செய்த கௌரவிப்பு நிகழ்வு, சிரேஷ்ட சட்டத்தரணியும் கல்முனை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவருமான எம்.ஐ.றைசுல் ஹாதி தலைமையில் ஞாயிற்றுக்கிழமை மருதமுனையில் நடைபெற்றது.

1963 ஆம் ஆண்டு மருதமுனையில் பிறந்த ரி.எல்.அப்துல் மனாப் 1983 ஆம் ஆண்டு கொழும்பு சட்ட பீடத்திற்குத் தெரிவானார். பின்னர் 1991 ஆம் ஆண்டு சட்டத்தரணியாக நியமனம் பெற்றுக் கொண்ட இவர் 2000 ஆண்டு நடைபெற்ற போட்டிப் பரீட்சையில் சித்தி பெற்று நீதிவானாக நியமனம் பெற்றார்.

இவர் கொழும்பு, திருகோணமலை, மூதூர், ஆகிய இடங்களில் நீதிவானாகவும் அக்கரைப்பற்று, திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் வவுனியா ஆகிய இடங்களில் மாவட்ட நீதிபதியாகவும் கடமையாற்றியுள்ளார்.

2017 ஆம் ஆண்டு மேல் நீதிமன்ற நீதிபதியாக பதவி உயர்வு பெற்ற இவர் மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதியாகவும் யாழ்ப்பாணத்தில் அமரும் வடமாகாணத்திற்கான குடியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற நீதிபதியாகவும் கடமையாற்றி கடந்த டிசெம்பர் மாதம் 24 ஆம் திகதி ஓய்வு பெற்றார்.

இவர் மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரி, அல்-மனார் மத்திய கல்லூரி, மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலயம் ஆகியவற்றின் பழைய மாணவர் ஆவார்.

நீதித்துறைக்கு இவர் ஆற்றிய சேவையை பாராட்டி கௌரவிக்கும் இந்த விழாவில் கல்முனை மேல் நீதிமன்ற நீதிபதி ஜயராம் ட்ரொஸ்கி, அக்கரைப்பற்று மாவட்ட நீதிமன்ற நீதிவான் ஏ.சி. றிஸ்வான், சம்மாந்துறை நீதிமன்ற நீதிவான் ரி.கருணாகரன், அக்கரைப்பற்று மேலதிக மாவட்ட நீதிமன்ற நீதிபதி திருமதி ரி. றஜீவன், கல்முனை நீதிவான் நீதிமன்ற நீதிபதி எம்.எஸ்.எம்.சம்சுதீன், மட்டக்களப்பு தொழில் நியாயாதிக்க நீதிமன்றத்தின் தலைவர் நீதிபதி வி.எம்.சியான், கல்முனை மேல் நீதிமன்ற முன்னாள் ஆணையாளர் எம்.எஸ்.எம்.ஜெமீல், சிரேஷ்ட சட்டத்தரணி இஸ்மாயில் பி மாரிப், பதில் நீதிவான் சட்டத்தரணி ஏ. எம்.பதுறுத்தீன், சிரேஷ்ட சட்டத்தரணி எப்.எம்.அமீருல் அன்சார் மௌலானா, ஏ.ஆர்.எம். கலீல், எம்.எம்.முபீத் ஆகியோர் உரையாற்றியதோடு கனடாவில் வசிக்கும் நீதிவான் ஏ.எச்.எம்.ஹம்ஸா அவர்களின் செய்தியை சட்டத்தரணி ஜாவிட் ஜெமீல் வாசித்தார். லண்டனில் வசிக்கும் சட்டத்தரணி அபுல்கலாம் அவர்களின் செய்தியை சட்டத்தரணி எம்.எம்.அப்துல் சுபாஹிர் வாசித்தார்.

இந்த நிகழ்வில் நீதிவான்கள், சிரேஷ்ட - கனிஷ்ட சட்டத்தரணிகள், ஓய்வு பெற்று செல்லும் உயர் நீதிமன்ற நீதிபதி அப்துல் மனாப் அவர்களின் குடும்பத்தினர், ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வுகளை சட்டத்தரணிகளான அனோஜ் பிர்தௌஸ், எம்.ஐ.யாஸ்த்தீன் ஆகியோர் தொகுத்து வழங்கினார்கள் நிகழ்வின் இறுதியில் ஓய்வு பெற்ற நீதிவான் ரி.எல்.அப்துல் மனாப் அவர்களுக்கு சட்டத்தரணிகள் சங்கத்தினரால் பென்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

# தாண்டியூர் சித்திரவேலாயுதப் பெருமான் குடமுழுக்கு விழாவும் பாற்குட பவனியும்

(துஷாரா, அபு அலா)

மட்டக்களப்பு - தாண்டியூர் ஸ்ரீசித்திரவேலாயுதப் பெருமான் ஆலயத்தின் மஹா 1008 சங்காபிஷேகமும் பாற்குட பவனியும் எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

நவமி திதியும் அனுச நட்சத்திரமும் கூடிய காலை 8.00 - 12.00 வரையுள்ள சுபநேரத்தில் தமிழ் மாதம் தை 11 ஆம் திகதி எம் பெருமானுக்கு 4 ஆவது 1008 மஹா சங்காபிஷேகமும், பாற்குட பவனியும் இடம்பெறவுள்ளதால் எம் பெருமானின் அடியார்கள் அனைவரும் வருகைதந்து ஆலயத்தில் இடம்பெறுகின்ற கிரியைகள், பூசை, ஆராதனைகளிலும் கலந்து கொண்டு எம் பெருமானின் அருளினை பெற்றேகுமாறு இறையன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

கரையாக்கன்தீவு அருள்மிகு ஸ்ரீ கருமாரியம்மன் ஆலயத்தில் இருந்து காலை 8.00 மணியளவில் பாற்குடப்பவனி எடுத்துவரப்படும் என்றும் பாற்குடம் எடுக்க விரும்பும் அடியார்களும், பெருமானின் சங்காபிஷேகத்துக்கு உபயம் பண்ண விரும்புவோரும் தங்களது பெயர் விவரங்களை முன்கூட்டியே ஆலய பரிபாலன சபையினரை தொடர்புகொண்டு பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொண்டுள்ளனர்.

எம் பெருமானின் பாற்குட பவனிக்கு தேவையான பாலினைவழங்கவிரும்புபவர்கள் முதல்நாள் ஆலயத்தில் வழங்கலாம் என்று தாண்டியயடி ஸ்ரீசித்திரவேலாயுத பெருமான் ஆலய சங்காபிஷேக பிரதம குரு இரா. திருக்கேதீஸ்வரன் சுவாமி அகோர சிவாச்சாரியார் அவர்கள் அடியார்களை கேட்டுக்கொண்டுள்ளார்.

# சித்த நெறி செம்மல் ஜீவாகர சுவாமிகளின் தென்னிந்திய திருத்தல யாத்திரை நிறைவு

(சகாதேவராஜா)

காரைதீவு ஸ்ரீசிவசக்தி குரு குடைச்சாமி சர்வமத பீடத்தின் தலைவர் சித்த நெறி செம்மல் ஜீவாகர சுவாமிகள் நாட்டுக்கும், மக்களுக்கும் நலன் வேண்டி மேற்கொண்ட 10 நாள்களுக்கான தென்னிந்திய திருதல யாத்திரையை நிறைவு செய்து கொண்டு கடந்த வியாழக்கிழமை குடைச்சாமி சர்வமத பீடத்தை மீண்டு வந்தடைந்தார்.

தமிழ்நாடு, ஆந்திரா,கேரளா ஆகிய மாநிலங்களில் உள்ள நூற்று கணக்கான வழிபாட்டு தலங்களை தரிசித்த இவர் நிறைவாக சபரி மலை ஐயப்பன் ஆலயத்தை சென்றடைந்து மகரஜோதி தரிசனத்தை மேற்கொண்டார்.

தாயகத்தை சேர்ந்த அன்பர்களால் இவருக்கு எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை சம்பிரதாயபூர்வ வரவேற்பு குடைச்சாமி சர்வமத பீடத்தில் வழங்கப்படுகின்றது. அன்றைய தினம் இவர் யாத்திரையில் கிடைத்த ஆன்மீக அனுபவங்களை பகிர்ந்து கொள்வதுடன் அன்பர்களுக்கு சிவ சின்னங்கள் வழங்கி ஆசிர்வதிக்க உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# தேத்தாவாடி கிராமத்திற்கான பிரதான வீதியின் அவலநிலை

(சியாஜ்)

கற்பிட்டி தில்லையூர் - தேத்தாவாடி கிராமத்தின் கற்பிட்டி நகரில் இருந்து தில்லையூர் மற்றும் தேத்தாவாடி ஆகிய கிராமங்களுக்கு செல்லும் பிரதான வீதி சிறிய மழையின் போதும் நீரில் மூழ்கிவிடும் நிலையில் காணப்படுகிறது .

இக்கிராம மக்கள் தமது அத்தியாவசிய தேவைகள் நிமித்தம் அன்றாடம் கற்பிட்டி நகருக்கு பயணம் செய்யக்கூடிய ஒரே ஒரு பிரதான வீதியாக காணப்படுவதுடன் உல்லாச ஹோட்டல்களுக்கும் இவ் வீதியே பயன்படுத்துப்படுகிறது.

இந்த வீதி புனரமைப்பு செய்யப்பட வேண்டும் என்பதுடன் தில்லையூர் கிராமத்தில் காணப்படும் கனிஷ்ட பாடசாலைக்கு அயல் பகுதி மாணவர்கள் பயண்படுத்தும் இவ் வீதி நீரில் மூழ்கிவிடுவதால் மாணவர்களும் பாடசாலை ஆசிரியர்களும் பொதுமக்களும் நீரில் இறங்கி செல்ல வேண்டிய நிலையே காணப்படுகின்றது.

இவ்வாறு இவ் வீதி சிறிய மழையின் போது மழை வெள்ளம் மற்றும் கடல் வெள்ளம் என்பவற்றால் நீரில் மூழ்கி விடுவதற்கான பிரதான காரணியாக காணப்படுவது அருகில் இருந்த நீரோடையை நிரப்பி சரியாக திட்டமிடப்படாமல் முன்னாள் கற்பிட்டி பிரதேச சபைத் தலைவரால் அமைக்கப்பட்டுள்ள விளையாட்டு மைதானம் என இக்கிராம மக்கள் தமது அதிருப்தியை வெளியிடுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.



# உள்ளூராட்சி உதவி ஆணையாளராக அம்பாறையில் அஸீம் கடமையேற்பு

(அபு அலா)

அம்பாறை மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளராக நியமிக்கப்பட்ட மருதமுனையைச் சேர்ந்த எஸ்.எல்.ஏ.எஸ்.அஸீம் நேற்று (செவ்வாய்க்கிழமை) தனது கடமையை பொறுப்பேற்றுக்கொண்டார்.

அம்பாறை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளராகக் கடமையாற்றி வந்த கமல் நெத்மினி ஜனாதிபதி செயலகத்திற்கு இடமாற்றம் பெற்றுச்சென்றதால் ஏற்பட்ட வெற்றிடத்திற்கே கல்முனை மாநகர சபையின் பிரதி ஆணையாளராக கடமையாற்றி வந்த இவர் நியமிக்கப்பட்டார்.

நிகழ்வில் கல்முனை மாநகர சபையின் ஆணையாளர் ஏ.டி.எம்.ராபி,



அக்கரைப்பற்று மாநகர சபையின் ஆணையாளர் என்.எம்.நௌபீஸ் மற்றும் காரியாலய உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டு சிறப்பித்ததுடன் தமது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டனர்.

# கற்பிட்டி அந்நூர் பாலர் பாடசாலையின் புதிய மாணவர் வரவேற்பு விழா இன்று!

(கற்பிட்டி எம் எம் எம் சியாஜ்)

கற்பிட்டி அந்நூர் பாலர் பாடசாலையின் 2025 ஆண்டிற்கான புதிய மாணவர்கள் வரவேற்பு விழா இன்று (புதன்கிழமை) காலை 09 மணிக்கு பாலர் பாடசாலையின் ஆசிரியர்கள் தலைமையில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்வின் அதிதிகளாக கற்பிட்டி பிரதேச சபையின் வடமேல் மாகாண பாலர் பாடசாலை பொறுப்பதிகாரி திருமதி ரூபீகா மற்றும் கற்பிட்டி பிரதேச செயலக பாலர் பாடசாலைகளுக்கான பொறுப்பதிகாரி எம்.நிப்ராஸ் ஆகியோருடன் அந்நூர் இளைஞர் கழகத்தின் தலைவர் நியாஸ்தீன், செயலாளர் நாசர் மற்றும் நிர்வாக உறுப்பினர்கள் கலந்து சிறப்பிக்க




உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



# கற்பிட்டி பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் கூட்டம்

(சியாஜ்)

கற்பிட்டி பிரதேச செயலகத்தின் 2025 ஆம் ஆண்டிற்கான முதலாவது ஒருங்கிணைப்பு குழு கூட்டம் கற்பிட்டி பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் பிரதேச செயலாளர் மிலங்க பிரசாத் ஏற்பாட்டில் கற்பிட்டி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் தலைவரும் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஜே.எம்.பைசல்தலைமையில்இடம்பெற்றது.

இந்நிகழ்வில் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான அஜித் கிஹான், கயான் ஜானக மற்றும் தேசிய மக்கள் சக்தியின் கற்பிட்டி பிரதேச இணைப்பாளர் சிவகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அத்தோடு கற்பிட்டி பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர்கள், நிர்வாக கிராம உத்தியோகத்தர், கற்பிட்டி விஜயா கடற்படைத் தளபதி, கற்பிட்டி மற்றும் நுரைச்சோலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள், கற்பிட்டி வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி, சுகாதார வைத்திய அதிகாரி, கற்பிட்டி பிரதேச சபையின் செயலாளர், பாலக்குடா விவசாய ஆராய்ச்சி நிலைய பொறுப்பதிகாரி, கண்டக்குளி வன ஜீவி அலுவலக அதிகாரிகள், கடற்றொழில் அலுவலக அதிகாரிகள், கல்விப் பணிப்பாளர், கிராம உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், வீடமைப்பு அதிகார சபை உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.





இதில் கற்பிட்டி பிரதேச சுகாதார மற்றும் சுற்றுச்சூழல், உல்லாச பயணத்துறை, கடற்றொழில் மற்றும் தடைசெய்யப்பட்ட மீன்பிடி வலை , மீன்பிடி முறை பற்றியும், மழை வெள்ளத்தின் தாக்கம் விவசாய உற்பத்தியின் பாதிப்புக்கள், காட்டாக்காளி மாடுகளால் ஏற்படும் பாதிப்புக்கள் அதற்காக பிரதேச சபையால் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் போதைப் பொருள் பாவனை அதனை இல்லாது ஒழிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியம் என பல்வேறு அபிவிருத்தி திட்ட செயற்பாடுகள் மற்றும் கற்பிட்டி பிரதேசத்தில் காணப்படும் குறைபாடுகள் அடிப்படை தேவைப்பாடுகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது .

## சாராயத் தவறணை வேண்டாம்

# கல்முனையில் விளக்குமாறுடன் நேற்றுப் பெரும் ஆர்ப்பாட்டம்

(சகா தேவராஜா)

கல்முனை பெரிய நீலாவணையில் மற்றுமொரு சாராயத்தவறணை வேண்டாம் என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் விளக்கு மாற்றுடன் நேற்று செவ்வாய்க்கிழமை கல்முனையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கல்முனை வடக்கு பிரதேச செயலக முன்றிலில் பெரிய நீலாவணை மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்கள்.

ஆர்ப்பாட்டக்காரர்கள்விளக்குமாறு மற்றும்பதாதைகளுடன் காணப்பட்டார்கள் .

கடந்த பத்தாம் மாதம் இரண்டாவது தவறணை திறக்கப்பட்டதும் ஆர்ப்பாட்டம் நடத்திய பொழுது அதனை மூடினார்கள்.

ஆனால் இப்பொழுது மீண்டும் திறப்பதற்கு ஏற்பாடு நடைபெறுகிறது.

எங்களுக்கு இந்த சாராயத்தவறணை வேண்டாம் என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

ஒரு மகஜர் பிரதேச செயலாளரிடம் வழங்கப்பட்டது.






## ஆளும்தரப்பினர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடயம் தொடர்பில் சமூகவலைத்தலங்களில் தெரிவிக்கப்படும் விடயங்களை பாருங்கள். மஹிந்த ராஜபக்சவுக்கு வழங்கப்பட்டிருக்கும் வீட்டை முடியுமானால் 44 இலட்சம் ரூபாய்க்கு குத்தகைக்கு வழங்கிக் காட்டுங்கள். சீனர்களுக்குதான் 44 இலட்சத்துக்கு அந்த வீட்டை வழங்க முடியும். மஹிந்த ராஜபக்சவின் வீட்டை முடியுமானால் மீளப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மஹிந்த ராஜபக்சவுக்கு ஒன்றுக்கு 10 வீடு வழங்குவதற்கு இந்த நாட்டில் மக்கள் இருக்கிறார்கள். அவரின் பாதுகாப்பு தரப்பினரை அகற்றினால் அவருக்கு பாதுகாப்பு வழங்க தெற்கில் இருந்து மக்கள் வருவார்கள். சந்திரிகா குமாரதுங்க குடும்பம்தான் இந்த நாட்டுக்கு அவர்களின் குடும்ப காணிகளை பகிர்ந்து வழங்கியவர்கள். அதனால் சந்திரிகா குமாதுங்க தனது உத்தியோகபூர்வ வீட்டில் இருந்து வெளியேறியதனால் அவர்களின் நற்பெயருக்குப் பாதிப்பு ஏற்படப்போவதில்லை. மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் ஜனாதிபதிகள் அனைவரும் இந்த நாட்டுக்கு சேவை செய்தவர்கள். அதனால் ஜனாதிபதி தும்முல்லை விமலே போன்று கதைக்கக்கூடாது.

எங்களுக்குப் பாதுகாப்பு தரப்பினர் தேவையில்லை. ஆனால் இன்னும் 6 மாதங்களில் ஆளும்தரப்பில் இருப்பவர்களுக்கு பாதுகாப்பு தேவைப்படும். அதனால் ஒழுக்கம் தொடர்பில் கதைப்பவர்கள். நாடாளுமன்றத்தில் எவ்வாறு செயற்படவேண்டும் என்பதைக் கற்றுக்கொள்ளுங்கள். 'தூய சிறிலங்கா' ஆரம்ப நிகழ்வுக்கு 70 இலட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளதாக நான் ஆரம்பத்திலே தெரிவித்திருந்தேன். அதனை தற்போதும் தெரிவிக்கிறேன். ஆனால் இந்த விடயத்தை நான் தெரிவித்த மறுநாளே ஜனாதிபதி செயலாளர் பிரதம கணக்காளர் குமாரசிங்க மற்றும் கணக்காய்வாளரை அழைத்துக் கலந்துரையாடி, இந்த செலவை 9 இலட்சமாகக் காட்டினார்கள். நான் இந்த விடயத்தைக் கதைத்ததால் அரசுக்கு 61 இலட்சம் ரூபாய் மீதமாகியது.

அத்துடன் 'தூய சிறிலங்கா' வேலைத்திட்டம் ஜனவரி முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் இந்த காலப் பகுதியில் நாட்டில் 10 துப்பாக்கி சூட்டு சம்பவங்களும் 7 சாவுகளும் இடம்பெற்றுள்ளன. வரலாற்றில் அதிக துப்பக்கிச் சூடு இடம்பெற்றிருப்பது இந்த காலப்பகுதியிலாகும். இவையும் 'தூய சிறிலங்கா' வேலைத்திட்டத்தின் மூலம் மாற்றம் பெறவேண்டும். அப்போதுதான் மக்களால் சுதந்திரமாக நடமாட முடியும்.

அதனால் கிளீன் சிறிலங்கா மூலம் முதலாவது பாதாள கோஷ்டி, போதைப்பொருள் வியாபாரங்களை அகற்றவேண்டும். அதன் பின்னர் குப்பைகளை அகற்றும் நடவடிக்கையை மேற்கொள்ள முடியும் -என்றார்.

## ஆளும்தரப்புடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று இடம்பெற்ற 'தூய சிறிலங்கா' வேலைத் திட்டம் தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தில் நாமல் ராஜபக்ச உரையாற்றும்போது தெரிவித்த விடயங்கள் தொடர்பிலேயே வாக்குவாதம் ஏற்பட்டது.

நாமல் ராஜபக்ச உரையாற்றும்போது தெரிவித்ததாவது:

'தூய சிறிலங்கா' திட்டம் தொடர்பில் பிரதமர் பதில்களை வழங்கினார். ஆனால் இந்தத் திட்டத்தின் நோக்கம் மற்றும் இதனைச் செயற்படுத்தும் முறை தொடர்பில் உங்கள் கட்சியிலுள்ள 159 பேருக்கும் மற்றும் அதனை செயற்படுத்தும் நிறுவனங்களுக்கும் அதன் அதிகாரிகளுக்கும் போதுமான தெளிவு இருக்குமா என்பது கேள்வியாக உள்ளது. பலரும் இந்தத் திட்டம் தொடர்பில் பல்வேறு கருத்துக்களை கூறுகின்றனர். அதனை செயற்படுத்தும் முறை தொடர்பில் சம்பந்தப்பட்ட நிறுவன பிரதானிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதா என்ற கேள்வி எழுகிறது.

'தூய சிறிலங்கா' திட்டத்தையே மஹிந்த ராஜபக்ச காலத்தில் கோட்டபாய ராஜபக்ச வேறு முறையில் முன்னெடுத்தார். இராணுவத்தினரைப் பயன்படுத்தி கால்வாய்கள் சுத்தம் செய்யப்படுவதாகவும், கொழும்பு நகரை அழகு படுத்துவதாகவும் நீங்களே அன்று குற்றச்சாட்டுகளை முன்வைத்தீர்கள். அவ்வாறு குற்றச்சாட்டுகளை முன்வைத்த நீங்களே, இன்று 'தூய சிறிலங்கா' என்ற பெயரில் அதேவேலையை அவ்வாறே செய்கின்றீர்கள். இதற்கு நிலையான தீர்வு வேண்டும்.

இதேவேளை முச்சக்கரவண்டி மற்றும் பஸ்களில் மேலதிக உதிரிப்பாகங்களை அகற்றுகின்றீர்கள். பின்னர் சட்டத்தை காட்டி பணத்தை செலுத்தினால் பிரச்சினை முடிந்தது என்கிறீர்கள். அவ்வாறு பணத்தை கொடுத்தால் விபத்துக்கள் நடக்காதா? அதனால் குறைந்தது 'தூய சிறிலங்கா' திட்டத்தை செயற்படுத்துவது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவியுங்கள் - என்றார்.

பதிலளித்த சபை முதல்வரான அமைச்சர் பிமல் ரத்தநாயக்க "போக்குவரத்து அமைச்சர் நானே. பணம் கொடுத்தால் பிரச்சினை தீரும் என்று யார் கூறியது என்பதனைக் கூறுங்கள்?" என்றார்.

மீண்டும் எழுந்த நாமல் ராஜபக்ச, "இதனை பொலிஸாரே கூறினர். இதனை நான் கூறியதற்காக பொலிஸாருடன் பிரச்சினை ஏற்படுத்தவேண்டாம். உங்களின் ஜனாதிபதி இராணுவத்தினர் கொலை செய்கின்றனர் என்று கூறுகின்றார். அவை தொடர்பில் பாதுகாப்புச் சபையில் கதைக்கலாம். அவற்றை அரசியல் மேடைகளில் பேச வேண்டாம்" என்றார்.

உடனே எழுந்த பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால, "பொலிஸார் அவ்வாறு எதனையும் கூறவில்லை. தாஜுதீனை கொலை செய்தது யாரென நாட்டுக்குத் தெரியும். தாஜுதீன் மற்றும் லசந்த விக்கிரமதுங்கவை கொலை செய்த கொலையாளி இங்கே கொலைகள் தொடர்பில் கதைக்கின்றார். நாமலுக்கு கொலைகள் தொடர்பில் கதைக்க எந்த அருகதையும் கிடையாது" என்றார்.

அதற்குப் பதிலளித்து உரையாற்ற ஆரம்பித்த நாமல் ராஜபக்ஷ, நான் ஜனாதிபதி கூறியதையே கூறினேன். நீங்கள் இப்போது பொலிஸாருக்கு பொறுப்பான அமைச்சராகவும், கடந்த நல்லாட்சி ஆளும்தரப்பில் ஊழல் மோசடிக் குழுவின் தலைவராகவும் இருந்தவர். அப்போது இவரே விசாரணை நடத்தினார். இந்தப் பிரச்சினைகள் தொடர்பில் அவதானத்தை செலுத்துங்கள். நான் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர். மக்களுக்காக கேள்வியெழுப்புவதே எனது வேலை.

அதனால் முதலில் நீங்கள் தூய்மையாகுங்கள். பின்னர் நாட்டை தூய்மைப்படுத்துங்கள். இது தொடர்பில் 159 உறுப்பினர்களுக்கும் தெளிவுபடுத்துங்கள். உங்களின் அரசியல் நோக்கங்களை நிறைவேற்ற 'தூய சிறிலங்கா' என்று எதிர்க்கட்சியை அச்சுறுத்தி பிரச்சினைகளை தீர்க்கலாம் என்று நினைக்க வேண்டாம். நாங்களும் அப்படி நினைத்தோம். ஆனால் அதனை செய்ய முடியாது என்பதனை நாங்கள் புரிந்துகொண்டோம். அந்தத் தவறை ஏற்றுக்கொள்கின்றோம்" என்றார்.

## காரணம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாளிலிருந்து இந்த எதிர்க்கட்சியின் பொறுப்புக்கள் என்ன என்றும், இந்த எதிர்க்கட்சி எந்த நோக்கத்திற்காக பேசுகின்றது என்றும் நான் சிந்தித்தேன். அவர்களின் திட்டம் என்ன என்பதை புரிந்துகொள்ள முயற்சித்தேன். எதிர்க்கட்சி என்ற விடயத்தில் அவர்களுக்கு எந்தவொரு பாரதூரமும் தெரியவில்லை. எந்தவொரு காரணமும் இன்றி கூச்சலிடுகின்றார்கள். நாடாளுமன்றத்திற்கு இருக்கும் கௌரவம் மற்றும் நாடாளுமன்றத்தில் இடம்பெறும் விவாதம் எதற்காக என்பது குறித்தும் புரிந்துகொள்ள முடியாதவர்களாக எதிர்க்கட்சியினர் மாறியுள்ளனர்.

இந்த நாட்டிற்கு தேவையான பரிணாமத்திற்கு இந்த நாட்டு மக்களின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வதே 'தூய சிறீலங்கா' வேலைத்திட்டத்தின் ஊடான எமது பிரதான நோக்கமாகும். பரிணாம மாற்றத்தை மேற்கொள்வதை ஆளும்தரப்போ, அரச அதிகாரிக்கோ தனியாக மேற்கொள்ள முடியாது. அதற்கு மக்களின் ஒத்துழைப்பு அவசியமாகும். மக்களின் இணக்கப்பாடு அவசியமாகும். மேற்கொள்ளப்பட வேண்டிய பரிணாமம் எவை? அந்தப் பரிணாமம் எவ்வாறு அமைய வேண்டுமென்ற தீர்மானத்தை எடுப்பதற்கு மக்களுக்குள் கருத்தாடல் அவசியமாகும். எமது ஆளும்தரப்பு மக்கள் மயமான ஆளும்தரப்பாகும். மக்கள் மயமான ஆளும்தரப்புச் செயற்படுவதில் ஒரு கலாசாரம் உள்ளது. அதில் மக்களும் பங்குகொள்வார்கள். மக்கள் எதிர்ப்பு ஆளும்தரப்பில் இருந்தவர்களுக்கும், மக்களைத் தமது தனிப்பட்ட நிகழ்ச்சி நிரலுக்காகப் பயன்படுத்திய ஆளும்தரப்பில் இருந்தவர்களுக்கும் அதனைப் புரிந்துகொள்ள முடியாமை குறித்து நான் ஆச்சரியப்படப் போவதில்லை. சட்டங்களை அமுல்படுத்தி கட்டாயத்தின் அடிப்படையில் முன்னெடுக்கும் வேலைத்திட்டம் அல்ல இது.

இந்த நாட்டிற்காக நாட்டின் முதலாளிமார்கள், வர்த்தகர்கள் அர்ப்பணிப்புகளைச் செய்ய விருப்பத்துடன் உள்ளனர். இது பாராட்டுதலுக்குரிய ஒன்றாகும். இதுவரைக் காலமும் இருந்த ஆளும்தரப்பினர் வர்த்தகர்கள் அல்லது முதலாளிமார்களை சமூகத்திற்காக பயன்படுத்திக்கொள்ளவில்லை. தமது பையை நிரப்பிக்கொள்ளவே பயன்படுத்தினர். அவ்வாறானவர்களுக்கு மக்கள் மயமான அரசியல் கலாசாரத்தை புரிந்துகொள்ள முடியாது.

எதிர்க்கட்சியில் சிலர் இந்த வேலைத்திட்டத்தை விமர்சித்துக்கொண்டு நல்லவற்றிற்காக முன்னிற்பதாகக் கூறுகின்றார்கள். அவ்வாறானவர்களுக்கு ஒரே நிலைப்பாட்டில்கூட இருக்க முடியவில்லை. ஆசிரியர்களை மண்டியிடச் செய்த, தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களை தாம் விரும்பிய பாடசாலைகளில் சேவையில் அமர்த்த முயற்சித்த, பிள்ளைகளைப் பாடசாலைகளுக்கு சேர்ப்பதற்கு கடிதங்களை வழங்குவதை மாத்திரம் கடமையாகக் கொண்ட யுகத்தை நாம் முடிவுக்கு கொண்டு வந்துள்ளோம். தொடர்ந்தும் அவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாது - என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



### சுற்றுச்சூழலை சுத்தம் செய்வது மட்டுமல்ல

# சமூக மனப்பான்மை மேம்பாட்டுடனான நீண்டகாலத் திட்டமே 'தூய சிறீலங்கா'

### கிழக்கு ஆளுநர் எடுத்துரைப்பு

(ஹஸ்பர்)

கிழக்கு மாகாண சபையின் அமைச்சின் செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்களுக்கிடையேயான கலந்துரையாடல் திங்கட்கிழமை திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ். ரத்நாயக்க மற்றும் கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் ஜே.எஸ். அருள்ராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அரச நிறுவன மட்டத்தில் தூய்மை சிறீலங்கா குறித்த விழிப்புணர்வு செயலமர்வுகளை நடத்துவது குறித்து அமைச்சுகள் மற்றும் திணைக்கள தலைவர்களுக்கு தெரிவிக்கப் பட்டது.

மேற்படி நிகழ்வின் போது கருத்துரைத்த ஆளுநர் தெரிவித்ததாவது:

'தூய சிறீலங்கா' என்பது குப்பைகளை அகற்றி சுற்றுச் சூழலை சுத்தம் செய்வது மட்டுமல்ல, சுற்றுச்சூழல், சமூக மற்றும் மனப்பான்மை மேம்பாட்டோடு செயற்படும் நீண்டகாலத் திட்டமாகும். - என்றார்.

கூடுதலாக, மாகாண சபையால் செலவினங்களைக் கட்டுப் படுத்துவதில் கவனம் செலுத்துமாறு நிறுவனத் தலைவர்களையும் கேட்டுக் கொண்டார். குறிப்பாக தொடர்ச்சியான செலவுகளைக் கட்டுப்படுத்த நிறுவன மட்டத்தில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார். ஆளுநர் அலுவலகம் இந்தப் பணிகளை மேற்கொள்ளத் தொடங்கியுள்ளது என்று ஆளுநர் கூறினார். ஒக்ரோபர் 2024 இற்கு முன்பு, அலுவலகத்தின் வாகனங்களுக்கான மாதாந்த எரிபொருள் செலவு ரூ. 1.62 மில்லியன் செலவுகளாக இருந்தது, ஒக்ரோபர் முதல், மாதாந்த எரிபொருள் விநியோக செலவு எரிபொருள் வாகனங்களுக்கானகட்டணம்ரூ. 2-3 லட்சங்களாக குறைக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டது. பயன்படுத்தப்படாமல்இருக்கும் பழுதடைந்த வாகனங்களை பழுதுபார்த்து பயன்பாட்டிற்கு கொண்டு வரவும், பயன்படுத்த முடியாத வாகனங்களை சட்டப் பூர்வமாக ஏலம் விடவும், மாகாணசபைக்குச்சொந்தமான உத்தியோகபூர்வ இல்லங்களின் பாழடைந்த நிலை குறித்து கவனம் செலுத்தி பராமரிப்பை மேற்கொள்ளவும் மாகாண சபையிடம் கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளது. அவற்றில் வேலை செய்யுங்கள்.

நிறுவனங்களின் தலைவர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப் பட்டன. இந்தக் கூட்டத்தில், மாகாண அமைச்சுக்கள் மற்றும் துறைகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து நிறுவனத் தலைவர்களுடன் கலந்துரையாடப்பட்டது.





# கிழக்கு ஆளுநரின் பொது மக்கள் சந்திப்பு திருகோணமலை மாவட்டச் செயலகத்தில்

(ஹஸ்பர்)

கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரட்ணசேகர அவர்களால் பொதுமக்களின் பிரச்சனைகளுக்கான தீர்வுச் செயல்முறையை விரைவுபடுத்தும் நோக்கில், திருகோணமலை மாவட்டச் செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் நேற்று (செவ்வாய்க்கிழமை) பொது மக்கள் தின சந்திப்பு நடைபெற்றது.





இந்நிகழ்வில், கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ். ரத்நாயக்க, திருகோணமலை மாவட்ட செயலாளர் டபிள்யூ.ஜி.எம். ஹேமந்த குமார, கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் ஜே.எஸ். அருள்ராஜ், பிரதேச செயலாளர்கள், பிரதேச சபைச் செயலாளர்கள் மற்றும் பிற பொறுப்பான நிறுவனங்களின் தலைவர்கள் இதில் கலந்து கொண்டனர்.



இந்நிகழ்வில் பொதுமக்கள் தங்கள் பிரச்சினைகளைபொறுப்பானஅதிகாரிகளிடம் தெரிவிக்க வாய்ப்பு வழங்கப்பட்ட அதே வேளை ஆளுநர், பிரதம செயலாளர் மற்றும் மாவட்டச் செயலாளர் ஆகியோரிடமும் தங்கள் பிரச்சினைகளை முன்வைக்க வாய்ப்பு வழங்கப்பட்டது.

# நானுஓயாவில் லொறி விபத்து

(கிஷாந்தன், சந்ரு)

நுவரெலியாவிலிருந்து நாவலப்பிட்டி நோக்கி பயணித்த லொறி ஒன்று, ஹற்றன் - நுவரெலியா பிரதான வீதியில் ரதெல்ல குறுக்குவீதியில்திங்கட்கிழமை இரவு விபத்துக்குள்ளானதாக நானுஓயா பொலிஸார் தெரிவித்தனர்.



இந்த விபத்து திங்கட்கிழமை இரவு 8 மணியளவில் ரதெல்ல குறுக்கு வீதியில் நானுஓயாசமர்செட் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

வீதியில் அதிவேகமாகச் சென்ற மேற்படி லொறியில் ஏற்பட்ட திடீர் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக, வேகக்கட்டுப்பாட்டை இழந்து பிரதான வீதிக்கு அருகில் உள்ள மண்மேட்டில் மோதி விபத்து ஏற்பட்டதாகக் விபத்து குறித்து விசாரணை நடத்தி வரும் நானுஓயா பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தால் லொறியில் இருந்த யாருக்கும் காயம் ஏற்படவில்லை என்றாலும், லொறி பலத்த சேதத்திற்குள்ளாகியுள்ளது.

கடந்த சில நாள்களாக ரதெல்ல குறுக்கு வீதியில் செல்லும் பல வாகனங்கள் விபத்துக்குள்ளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# சிறுபான்மையினருக்காக குரல் கொடுத்தவர் ஐவன்

## அனுதாபச் செய்தியில் முஸ்லிம் மீடியா போரம்

(ஸாகிர்)

ராவய பத்திரிகையின் ஸ்தாபக ஆசிரியரும் நாட்டின் ஊடகத்துறையில் தனக்கென தனித்துவமான பெயரை உருவாக்கி, இலங்கை ஊடகத்துறையில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்திய விக்டர் ஐவனின் மறைவு குறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றது.

மூத்த ஊடகவியலாளர் விக்டர் ஐவனின் மறைவு குறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் சார்பில் அதன் தலைவர் என்.எம். அமீன் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் மேலும் கூறியிருப்பதாவது -

சுதந்திர ஊடக அமைப்பின் ஆரம்ப அங்கத்தவராக காலஞ்சென்ற விக்டர் ஐவன், அதன் ஏற்பாட்டாளராகவும், பொதுச் செயலாளராகவும் பதவி வகித்து ஊடகத்துறையின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கு அரும் பங்களிப்புச் செய்தார். அவர் இந்த நாட்டின் புலனாய்வு ஊடகத்துறைக்காக தான் ஆரம்பித்த ராவய பத்திரிகையின் மூலம் புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்தினார்.

நாட்டில் நீதித்துறை சுதந்திரத்திற்காக ஊழல் மிகு நீதிவான்களோடு மோதி அவர்களது செயற்பாடுகளை அம்பலப்படுத்தி, நீதித்துறை சுதந்திரத்தோடு செய்வதற்கு அச்சம், பீதி இன்றி அவர் ஆற்றிய பங்களிப்புக்காக அவர் பெயர் இலங்கையில் ஊடக வரலாற்றில் விஷேடமாக இடம்பெறும். கருத்து சுதந்திரம், தகவல் அறியும் உரிமைக்காக எப்போதும் குரல் கொடுத்த விக்டர் ஐவன், அவற்றைப் பேணுவதற்கும் முன்னேற்றுவதற்குமாகச் செயற்பட்டார்.



சிறுபான்மை தமிழ், முஸ்லிம் மக்களது உரிமைகளைப் பாதுகாப்பதற்காக தனது எழுத்து மூலம் தொடர்ந்து குரல் கொடுத்து வந்தார். நாட்டில் முஸ்லிம்களது பிரச்சினைகளின் போது, ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் வேண்டுகோளுக்கு இணங்க எவ்வித தயக்கமும் பாராது குரல் கொடுத்து வந்தார். முஸ்லிம் மீடியா போரத்தின் மூன்று தசாப்த பணிகளில் விக்டர் ஐவன் பல விடயங்களில், பல சிறுபான்மையினர் முகம் கொடுக்கும் போது குரல் கொடுத்ததை நன்றியுடன் நினைவு கூர்கின்றோம்.


புலனாய்வுப் பத்திரிகையின் கலையை வளர்ப்பதற்கு தனது பத்திரிகை மூலம் கூடுதலான வாய்ப்புகளை அளித்தார். நாட்டின் சிறுபான்மை தமிழ், முஸ்லிம்கள் உரிமைகளுக்காக உரத்து குரல் கொடுத்த விக்டர் ஐவன், ஏனைய பத்திரிகைகள் சிறுபான்மை மக்களின் உரிமைகளுக்கு போதிய இடமளிக்காத போது, தமது பத்திரிகை மூலம் கூடுதலான இடமொதுக்கியது குறிப்பிடத்தக்கது. அதுமட்டுமன்றி, சிறுபான்மை மக்களின் உரிமைகளுக்காக அவர் குரல் கொடுத்தே வந்தார்.

பத்திரிகையாளர் என்ற வகையிலும் சமூக செயற்பாட்டாளர் என்ற வகையிலும் சிறுபான்மை தமிழ், முஸ்லிம்களின் உரிமைகள் மறுக்கப்படும் போது உரத்துக் குரல் கொடுத்தார்.

முஸ்லிம் சமூகம் நாட்டில் பிரச்சினைகளை எதிர்நோக்கிய போது, முஸ்லிம் மீடியா போரத்தின் வேண்டுகோளில் உரியவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து அவற்றுக்கு தீர்வு கிடைக்க வழி செய்தமைக்கு நன்றியுடன் முஸ்லிம் சமூகம் இன்றும் நினைவு கூர்கின்றது என்றும் தெரிவித்துள்ளார்.




# வியட்நாம் உலக தமிழர் மாநாட்டுக்கு இந்து மத குருபீடத்திற்கும் அழைப்பு



பண்ணாட்டுதமிழர்நடுவம்மற்றும்வியட்நாம் தமிழ்ச் சங்கம் இணைந்து நடத்தும் 'வியட்நாம் உலகத் தமிழர் மாநாடு- 2025' இற்கு நடுவம் அமைப்பின் தலைவர் டாக்டர் தணிகாசலம் அவர்கள் இந்துக் கலாசார திணைக்களத்தின் பணிப்பாளர் வை.அனிருத்தன் மற்றும் சர்வதேச இந்துமதபீட செயலாளர் சிவஸ்ரீ ராமச்சந்திரன் குருக்கள் (பாபு சர்மா) ஆகிய இருவரையும் யாழ்ப்பாணம் குருகுலத்தில் சந்தித்து உலக தமிழர் மாநாட்டுக்கு வருகைத்தருமாறு அழைப்புவிடுத்தார்.

அதற்கான அழைப்பிதழை கடந்த வியாழக்கிழமை

யாழ் குருகுலத்தில் உத்தியோகத்தர் பூர்வமாக வழங்கிய போது பிடிக்கப்பட்ட படம்.( படப்பிடிப்பு எஸ். எம். சுரேந்திரன்)

# போதைப் பொருள் வியாபாரி 'ஆப்ப மாமா' தொடர்பாக விசாரணைகள் முன்னெடுப்பு



(பாறுக் ஷிஹான்)

கல்முனை விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்ட பிரபல போதைப்பொருள் வியாபாரி யான ஆப்ப மாமா குறித்து மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப் பட்டுள்ளன.

நீண்ட காலமாக ஐஸ் போதைப் பொருளை விற்பனை செய்து வந்த நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு கல்முனைவிசேடஅதிரடிப்படை அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் பேரில் மேற்கொள் ளப்பட்ட சோதனை நடவடிக்கையில் ஐஸ் போதைப் பொருளுடன் இவர் கைதானார்.

அம்பாறை மாவட்டம் பெரியநீலா வணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மருதமுனை பிரதேச வைத்தியசாலை வீதி மற்றும் ஷம்ஸ் தேசிய பாடசாலைக்கும் அருகில் வைத்து பெரியநீலாவணை வி.சி வீதியை சேர்ந்த 37 வயதுடைய சந்தேக நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டிருந்தார்.

இதன்போது கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் இருந்து ஒரு கிராம் 30 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருள் மீட்கப்பட்டிருந்ததுடன் சந்தேகநபர்கள் உள்ளிட்ட சான்றுப்பொருள்கள் என்பன சட்டநடவடிக்கைக்காக பெரியநீலாவணை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட் டிருந்தன.

மேலும் இந்த கைது நடவடிக் கையானது கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பதில் பொறுப்பதிகாரி பொலிஸ்பரிசோதகர் பி.இஹலகேவின் வழிநடத்தலில் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.01.2025இல் வெளியிடப்பெற்றது